1975 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ): நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் நிலக்கீல் சாலைகளில் ரப்பர் சேர்ப்பது பற்றி ஆய்வு செய்து சோதனை விளைவுகளை ஓர் ஆய்வகக் குறிப்பாக வெளியிட்டுள்ளது. அது "நிலக்கீல் சாலைகளில் ரப்பர்" என்ற தலைப்பில் குறிப்பு எண் 15 ஆக வெளியிடப்பட்டது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்தச் சாலையை அமைக்க ஒரு கிலோமீட்டருக்கு எவ்வளவு தொகை தேவைப்படுகிறது? குறைந்த பட்சம் முன்மாதிரியாக சென்னை மாநகரத்தில் அண்ணாசாலையையாவது இரப்பர் சாலையாக மாற்றியமைக்க ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இதற்குண்டான செலவு எவ்வளவு என்பதற்கான புள்ளிவிவரம் இப்பொழுது இல்லை. ஆய்வகத்தில்தான் இருக்கிறது. ஆனால் இது உற்சாகமூட்டுவதாக இருக்கிறது. இந்த ஆண்டு பரிசீலிக்கலாமா என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. தி. பொன்னுமலை: தலைவரவர்களே, இந்த இரப்பர் சாலைகள் வெளிநாடுகளில் அதிகமாக இருக்கின்றனவா? இதை நம்முடைய நாட்டிலே போடுவதால் செலவு அதிகம் ஆகிறதா? இதைப் போடுவதால் நமக்கு நஷ்டம் ஏற்படுகிறதா? இதற்கு அரசு ஆவன செய்யுமா என்று ஆறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, முழுக்க முழுக்க இரப்பரை வைத்துப் போடும் சாலை அல்ல. நாம் ஏற்கனவே போடும் தார் கீலோடு இரப்பர் தூளையும் கலந்து போடுவதாகும். இதனால் செலவு ஆரம்பத்திலே அதிகமாக இருந்தாலும் அதிக நாட்கள், ஆண்டுகள் வரும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இது பரிசோதனை நிலையில் தான் இருக்கிறது. இருந்தாலும் பரிசோதனை உற்சாகமூட்டுவதாக இருக்கிறது.

பக்கிங்காம் கால்வாய் கரைகள்

*725 வின—திரு. மா. வெ. நாராயணசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் நகரத்தில் பக்கிங்காம் கால்வாயின் கரைகளைப் பலப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை?

[1975 ஏப்ரல் 19

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) : வடக்கு பக்கிங்காம் கால்வாய் மைல் 0/0 முதல் மைல் 10/1 வரையுள்ள பகுதியில் சீர்திருத்தப் பணிகள் முதற்பகுதியில் செய்வதற்காக 65.20 லட்சம் ரூபாய் கொண்ட மதிப்பீட்டிற்கு அரசு ஜனவரி 1974-ல் ஒப்புதல் அளித்தது. ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீட்டின்படி மேற்படி கால்வாயானது மைல் 0/0 முதல் 10/1 வரை (திருவொற்றியூர் நகராட்சி எல்லையில் உள்ள பகுதி மைல் 4/3—6—0 மைல் வரை உட்பட) ஆழப்படுத்தவும், அகலப் படுத்தவும் இரு பக்கங்களில் கரைகளை மண்ணால் நிரப்பியும் சரிவுகளில் சிமெண்ட் கல் பொருத்தி பலப்படுத்தப்படும் பணிகள் செயல்படுத்தப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்தப் பக்கிங் காம் கால்வாய் வழியாக பழவேற்காடு, எண்ணூர் போன்ற பகுதிகளிலிருந்து திருவொற்றியூர் வழியாக சென்னைக்குப் படகுகள் மூலம் பொருட்களைக் கொண்டு வருகிறார்கள். கல்கத்தாவில் இருப்பதைப்போன்று இதை நிரந்தரமான போக்கு வரத்திற்கு ஏற்றதாக ஆக்கும் அளவில் பெரிய திட்டத்தைத் தயாரிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நிரந்தரமான போக்குவரத்தாக ஆக்குவதற்குத்தான் அரசு யோசித்தது. மத்திய அரசாங்கம் இதற்கான முழு மானியத்தை யும் கொடுக்கவில்லை. ஆந்திரத்தையும் தமிழ்நாட்டையும் சேர்க்கும் இந்தக் கால்வாயைப் பற்றி ஆந்திர அரசும் தமிழக அரசும் முயற்சி எடுத்திருக்கிறது. மத்திய அரசாங்கமும் பண உதவி செய்திருக்கிறது.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவரவர்களே, இதைச் சீர்திருத்தி அமைப்பதற்காக ஆகும் மொத்தத் தொகை எவ் வளவு ? மத்திய அரசாங்கம் ஏதாவது மானியம் அல்லது உதவித் தொகை கொடுத்து இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, 600 இலட்சம் ரூபாய்க்கு உண்டான எஸ்டிமேட்டைத் தயா ரித்து மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பினோம். ஆனால் 100 இலட்சம் ரூபாய்க்குத்தான் இந்த ஆண்டு, சென்ற ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள மத்திய அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவரவர்களே, முக்கியமான இந்தப் பணியை ஆரம்பிக்கும் நேரத்தில் பக்கிங்காம கால்வாயின் ஓரத்தில் சுமார் 3,000 குடிசைகள் இருக்கின்றன, அவைகளையும் சீரமைப்பதற்குத் தேவையான பண உதவியை இந்த இலாக்கா வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1975 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இது வாய்க்காலைச் சீர்படுத்தும் முயற்சியே தவிர ஓரத்தில் உள்ள குடிசைகளைப் பற்றிய முயற்சி அல்ல. அதைப்பற்றி குடிசை மாற்று வாரியத் தலைவரிடத்தில் கேட்க வேண்டும்.

கருக்காகண்டியில் பாலம்

*726 வின— திரு. ஈ. எம். நடராசன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம், கொள்ளேக்கால்—செல்லம் பாளையம் ரோட்டில் கருக்காகண்டி என்னுமிடத்தில் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) : மத்திய சாலை நிதி உதவித் திட்டத்தின் கீழ் ரூபாய் 10.92 லட்சம் செலவில் கொள்ளேக்கால்—செல்லம்பாளையம் சாலையில் ஒரு பாலம் அமைக்கும் செயற்குறிப்பு மத்திய அரசின் ஒப்பளிப்பிற்காக அனுப்பப்பட்டுள்ளது.

திரு. கே. ரங்கனாதன் : தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் பாப்பநாயக்கன் பாளையம், கணபதி, கிருஷ்ணராயபுரம் ஆகிய இடங்களின் மத்தியில் உள்ள சங்கரனூர் பள்ளத்தில் மேம்பாலம் கட்ட வேண்டுமென்று நீண்ட நாள் கோரிக்கை இருக்கிறது. அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இதற்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்று நினைக்கிறேன். தனியாக கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன்.

பீங்கான் பொருள்கள் தயாரிப்பு

*727 வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில்–மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பீங்கான் பொருள்களைத் தயாரிக்கும் தொழில்களை ஊக்கப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?